திரு. வெ. அரங்கராசன் : தலைவர் அவர்களே, துறையூர் நகரில் புறச்சாலை அமைக்கும் திட்டத்திற்காக ஓராண்டுக் காலத்திற்கு முன்பே நிலங்கள் சர்வே செய்யப்பட்டது. ஆனால், இப்போது அமைச்சர் அவர்கள் அதுபற்றிய பரிசீலனை இல்லை என்று சொல்கிறார்கள். முசிறி-குளித்தலை பாலம் கட்டப்பட்ட பின்னர், இப்போது தினசரி கிட்டத்தட்ட 1,000 லாரிகள் துறையூர் நகரம் வழியாக வருவதால், அதிக விபத்துகள் அந்தச் சாலையில் ஏற்படுகின்றது. ஆகவே, இந்தப் புறச்சாலை அமைக்கும் செயற்குறிப்பை அரசு மறுபரிசீலனை செய்து, விரைவாக நிறைவேற்றித் தர முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மாற்று வழிப் பாதை ஒன்று 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ. 6.26 இலட்ச மதிப்பீட்டில் அமைத்துத் தருவதற்காக ஒரு திட்டம் ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டது. ஆனால் இதுவரையில் அது அரசின் ஒப்புதல் பெற்ற எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. இப்பணி வரும் ஆண்டில் நிதி நிலைக்கு ஏற்ப மாநிலச் சாலைகள் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. வெ. அரங்கராசன் : தலைவர் அவர்களே, நிதி வசதி பொறுத்து எடுத்துக்கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். எப்படி இருந்தாலும் அந்தத் திட்டத்தை 1981–82 ஆம் ஆண்டுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நிதிநிலை சரியாகயிருந்தால் எடுத்துக்கொள்ளப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

போழியம்மனூர் குடிநீர் வழங்கு திட்டம்.

*வினா எண் 236—திரு. அ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம் ஆத்தூர் தொகுதி போழியம்மனூர் என்னும் கிராமத்தில் கூட்டுக் குடிநீர் திட்ட வேலை பாதி அளவில் நிற்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த வேலை எப்பொழுது மீண்டும் துவங்கப்படும் ?

(இ) இத் திட்டம் நிறைவேற எவ்வளவு காலம் ஆகும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ)—மதுரை மாவட்டம் ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள போழியம்மனூரில் ஒருங்கிணைந்த கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் குடிநீர்த் திட்ட வேலை 1972 இல் மேற்கொள்ளப்பட்டு பணப்பற்றாக்குறை காரணமாக முடிவு பெறாத நிலையில் உள்ளது. இக் குடிநீர் திட்டத்திற்காக ரூ. 5,000, 14—1—1980-ல் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஆய்வுக் கட்டணமாகச் செலுத்தப்பட்டது. இவ்வேலைக்கான மதிப்பீட்டை தயார் செய்யுமாறு திண்டுக்கல் உதவிப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். மேலும் இதனை மாவட்ட ஆட்சியர் கவனத்திற்குக் கொண்டு வந்து, வேலையினை முடிக்க ஆவன செய்யப்படும்.

(இ) இவ்வேலை தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் செய்து முடிக்கப்படும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: தலைவரவர்களே, தற்போது அங்கே தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருப்பதால் இந்தத் திட்டம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுமா அல்லது தனியாகச் செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ரெட்டியார் சத்திரத்தைப் பொறுத்தவரையில் அது ஏற்கனவே தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு வேலை நடந்தது. மேலும் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுமா அல்லது தனியாகச் செயல்படுத்தப்படுமா என்ற குறிப்பு தற்போது என்னிடம் இல்லை. ஆனால் ஒவ்வொரு கிராமத்திற்கும் குடிநீர் வசதி செய்து தருவதற்காக தன்னிறைவுத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் இந்தக்கிராமத்தின் பிரச்சினை முடிவு பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, குடிநீர் வடிகால் வாரியம் ஏற்றுக்கொண்டதிலிருந்து 3 மாதங்களுக்குள் இத்திட்டம் செய்து முடிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். இந்த குடிநீர் வடிகால் வாரியம் எப்போது இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளும் என்பதை அறிவிப்பார்களா?